செ.வெ.எண்: 07/2018 நாள்: 05.01.2018

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அகஸ்தீஸ்வரம் மற்றும் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில், ஓகி புயலினால் சேதமடைந்து, சீரமைக்கப்பட்ட பல்வேறு இடங்களை இன்று (05.01.2018) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஓகி புயலினால் பல்வேறு இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்ததில், சாலைகள், மின்கம்பங்கள் மற்றும் வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலை பயிர்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், சுசீந்திரம் பேரூராட்சி, சுசீந்திரம் அரசு நடுநிலைப்பள்ளியில், ஓகி புயலின் காரணமாக, மூன்று மரங்கள் பள்ளி வளாகத்தில் முறிந்து விழுந்தது. இதனால், பள்ளி வளாகத்தில் உள்ள ஓடுகள் சேதமடைந்தது. சேதமடைந்த ஓடுகளை சுமார் ரூ.40 ஆயிரம் செலவில் உடனடியாக மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக சீரமைக்கப்பட்டது. இதனை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (05.01.2018) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மேலும், மாணவ செல்வங்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு, வெள்ளத்தினால் சேதமடைந்த சுசீந்திரம் அரசு நடுநிலைப்பள்ளியின் சுற்றுச்சுவரை, உடனடியாக அகற்றிட, அலுவலர்களுக்கு உத்தரவிட்டு, மாணவ, மாணவியர்கள் கல்வி கற்கும் ஆற்றலை ஆய்வு செய்தார்.

பின்னர், இரவிபுதூர் ஊராட்சி, இரவிபுதூர் அரசு தொடக்கப்பள்ளியில், ஓகி புயலினால் சேதமடைந்த பள்ளிக்கட்டிடத்தின் மேற்கூரை ஓடுகள் சுமார் ரூ.1.5 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, 1-ம் வகுப்பு, 3-ம் வகுப்பு மற்றும் 5-ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் கல்வி கற்கும் ஆற்றலை ஆய்வு செய்தார். குலசேகரபுரம் ஊராட்சி, குலசேகரபுரம் அரசு தொடக்கப்பள்ளியில் ஓகி புயலினால் சேதமடைந்த பள்ளிக்கட்டிடத்தின் மேற்கூரை ஓடுகள் சுமார் ரூ.35 ஆயிரம் செலவில் சீரமைக்கப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, குலசேகரபுரம் அரசு தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி இணைந்து நடத்திய முப்பெரும் விழாவில், கபடி போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு கேடயங்களும், பாராட்டுச்சான்றிதழ்களும் வழங்கி, வாழ்த்துகளை தெரிவித்தார்.

பின்னர், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், பஞ்சலிங்கபுரம் ஊராட்சியில், ஓகி புயல் மற்றும் மழை வெள்ளத்தினால், தெப்பகுளம் சாலை மற்றும் நரிகுளம் சாலை சேதமடைந்தது. சுமார் ரூ. 2.48 இலட்சம் செலவில் சீரமைக்கப்பட்ட நரிக்குளம் சாலையினையும் (மெட்டல் சாலை), ரூ.35 ஆயிரம் செலவில் சீரமைக்கப்பட்ட தெப்பகுளம் சாலையினையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம், லீபுரம் ஊராட்சி, ஆரோக்கியபுரம் என்ற இடத்தில், மழை வெள்ளத்தினால் குடிநீர் குழாய் மற்றும் குடிநீர் விநியோகம் செய்யும் குழாய் சேதமடைந்தது. சுமார் ரூ.3 இலட்சம் செலவில், புதிதாக அமைக்கப்பட்ட குடிநீர் குழாய்களை பார்வையிட்டு, பொதுமக்களிடம் குடிநீர் விநியோகம் குறித்து கேட்டறிந்தார்.

அதனை தொடர்ந்து, குண்டல் அரசு தொடக்கப்பள்ளியில், ஓகி புயலினால் சேதமடைந்த பள்ளிக்கட்டிடத்தின் மேற்கூரை ஓடுகள் சுமார் ரூ.10 ஆயிரம் செலவில் சீரமைக்கப்பட்டது. இதனை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டு, பள்ளி வளாகத்தில் (வகுப்பறை பின்புறம்) பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள சுவரினை அகற்றிட, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார். பின்னர், மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்து, கல்வி கற்கும் ஆற்றலை ஆய்வு செய்தர்.

பின்னர், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம், வடக்குதாமரைகுளம் ஊராட்சியில், ஓகி புயல் மற்றும் மழை வெள்ளத்தினால் சேதமடைந்த பறக்கை-தாமரைகுளம் சாலையினையும், தர்மபுரம் ஊராட்சி, ஈத்தாமொழி பெரியவிளை என்ற இடத்தில், ஓகி புயலினால் முற்றிலும் சேதமடைந்த பயணிகள் நிழற்குடையினை பார்வையிட்டு, வரும் நிதியாண்டில் புதிய பயணிகள் நிழற்குடை அமைக்க, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, கூடுதல் ஆட்சியர் திரு. ராஹூல்நாத் இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் சங்கரஜோதி, அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. முத்துகுமார், தலைமை ஆசிரியர்கள் திருமதி கோமதி, திருமதி வான்மதி, திருமதி ஜெயசாந்தி, திருமதி கிருஷ்ணகுமாரி, திருமதி நிர்மலா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.